# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் – 01.07.2026**

**(காணொளி காட்சி விசாரணை)**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1509/A/2023**

திரு.எஸ்.சுப்பிரமணியம் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.த.மலர்<br>பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), திருப்பூர் அவர்கள் ஆஜராகவில்லை<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது.<br><br>திரு.க.மாரிமுத்து,<br>துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், |

| | |
|---|---|
| | ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 26.02.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கூடுதல் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடிதம் எண்.பி2/6026/2016, 31.03.2016 நாளிட்ட ஆவணத்தின் நகல் உட்பட 3 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 28.08.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 18.09.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.02.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.க.மாரிமுத்து, துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு மூ.மு.17976/2023/ஆ2, 28.08.2023 மற்றும் ந.க.18331/2024/ஆ2, 20.09.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், ப.மு.21418/2023/ஆ2, 18.10.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், பொதுத்தகவல் அலுவலரால் தனக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை எனத்தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், உரிய காலத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(3)-ன் கீழ் உரிய காலத்தில் மாற்றம் செய்து தகவல்களை பெற்று வழங்காமல், மேற்படி கடிதங்கள் தங்கள் அலுவலகத்தில் தகவலாக இல்லை என கூறியுள்ளது சரியானது அல்ல என்று தெரிவித்து, பின்வருமாறு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது :-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களுக்குரிய தகவல்களை உரிய பொது அதிகார அமைப்பிடமிருந்து பெற்று "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று***

*நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1509/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் - 641 604.

**<u>மனுதாரர்</u>**

திரு. எஸ்.சுப்பிரமணியன்
206, முதல் வீதி,
சிவசக்தி நகர்,
சிறுபூலுவப்பட்டி,
திருப்பூர் - 641 603.

Copy to file

KRM/PA 01.07.2026